# பிராந்திய அமைப்புக்கள்

பிராந்திய அமைப்புகள் (ROs) என்பது தேசிய அரசுகளின் எல்லைகளைத் தாண்டிச் செயல்படும் புவிசார் அரசியல் நிறுவனங்களாகும். இவ்வமைப்புகள் சர்வதேச நாடுகளையும் அங்கத்தவர்களாக இணைத்துச் செயற்படுவதால் சர்வதேச அமைப்புக்கள் (IOs) எனவும் அழைக்கப்படுகின்றன. பிராந்திய அமைப்புக்கள் என்ற வார்த்தை குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட நோக்கத்தையடையப் பயன்படுத்தப்படும் வார்த்தையாக அர்த்தப்படுத்தப்படுகிறது. ஆனால் தனித்துவமான புவியியல் கண்டங்கள், அல்லது புவிசார் அரசியல் போன்ற பண்புகளால் உருவாக்கப்படும் பொருளாதார கூட்டுக்களும் இதற்குள் உள்ளடக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட புவியியல் அல்லது புவிசார்அரசியல் எல்லைக்குள் உள்ள அரசுகள் தமக்கிடையில் கூட்டுக்களை உருவாக்குவதன் மூலம் அரசியல் மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு அல்லது உரையாடலை வளர்ப்பதற்காகப் பிராந்திய அமைப்புக்களை நிறுவுகின்றன. பெரும்பாலான பிராந்திய அமைப்புகள் ஐக்கிய நாடுகள் சபையினால் நிறுவப்பட்டுள்ள பலதரப்பு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற முயற்சி செய்கின்றன. பிராந்திய அமைப்புகளுக்கு பின்வருவம் சில உதாரணமாக் கூறலாம்.

1. **ஆபிரிக்க ஒன்றியம் (African Union -AU):-**

   ஆபிரிக்க ஒன்றியம் 2001 ஆம் ஆண்டு ஜுூலை மாதம் 08 ஆம் திகதி நிறுவப்பட்டது. இது ஏற்கனவே இயங்கிவந்த ஆபிரிக்க ஒற்றுமைக்கான அமைப்பினை (Organization for African Unity- OAU, 1963) சீரமைத்து உருவாக்கப்பட்ட அமைப்பாகும். ஆபிரிக்க கண்டத்தில் உள்ள 55 நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்டதொரு அமைப்பாகும். AU இன் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று அதன் உறுப்பு நாடுகளின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும்.



2. **தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம்** (Association of Southeast Asian Nations -ASEAN):-

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN) என்பது பத்து தென்கிழக்கு ஆசிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பிராந்திய அமைப்பாகும், இது ஆசியான் என்ற பெயரில் பிரபல்யமானதாக இருந்தது. ஆசியான் என்ற அமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன்னர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் அங்கத்துவத்துடன் தென்கிழக்கு ஆசியாச் சங்கம் (ASA) என்ற பெயரில் ஒரு அமைப்பு 1961 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 திகதி உருவாக்கப்பட்டது. இது பின்னர், 1967 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 08 ஆம் திகதி இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய ஐந்து நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கையெழுத்திட்ட பிரகடனத்தில் மூலம் ஆசியான் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் பின்னர் மியன்மார்,கம்போடியா, லாவோஸ்,வியட்நாம்,புருனே ஆகிய நாடுகள் இணைந்த கொண்டன.




Image: ASEAN

**ஆசியான் அமைப்பின் முக்கிய நோக்கங்கள்சூ-**

i. பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி, சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார வளர்ச்சியை துரிதப்படுத்துவது,
ii. பிராந்திய அமைதி, ஒத்துழைப்பு மற்றும் பொதுநலன் சார்ந்த விடயங்களில் பரஸ்பர உதவியை ஊக்குவித்தல்,
iii. பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்குப் பரஸ்பரம் உதவி வழங்குதல்,
iv. விவசாயம் மற்றும் கைத்தொழில்துறை வளர்ச்சிக்கு ஒத்துழைத்தல்,
v. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்,

இது அங்கத்துவ நாடுகளுக்கிடையில் கூட்டுறவினையும், ஒத்துழைப்பையும் ஊக்குவிக்கிறது. இவ்வகையில் பொருளாதார, அரசியல், பாதுகாப்பு, இராணுவ ரீதியான கூட்டுறவினையும், ஒத்துழைப்பையும் அங்கத்துவ நாடுகளிடையில் உருவாக்குகிறது. அத்துடன் ஏனைய ஆசிய நாடுகளுடன் கல்வி மற்றும் சமூக, கலாசார ஒருங்கிணைப்பினையும் உருவாக்குகிறது. ஆசியா –பசுபிக் ஒத்துழைப்புக்கான மையத் தளமாகவும் இது செயற்படுகிறது. இதனால் உலகின் மிகச் செல்வாக்குமிக்க அமைப்புகளில் ஒன்றாகவும் இது உள்ளது.

3. **அரபு லீக்** (Arab League -AL),

அரபு லீக், அரபு நாடுகளின் கழகம் (LAS) என்றும் அழைக்கப்படுகிறது. மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா கண்டத்திலுள்ள சில அரசுகள் ஒன்றிணைந்து அரபு அரசுகளின் பிராந்திய அமைப்பு 1945 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி கெய்ரோவில் அரபிச வளர்ச்சியின் ஒருபகுதியாக உருவாக்கப்பட்டது.

எகிப்து, சிரியா, லெபனான், ஈராக், ஜோர்டான், சவுதி அரேபியா மற்றும் யேமன் ஆகிய நாடுகள் ஆரம்ப உறுப்பு நாடுகளாக இருந்தன. இதன் பின்னர் லிபியா (1953) சூடான் (1956) துனிசியா மற்றும் மொராக்கோ (1958) குவைத் (1961) அல்ஜீரியா (1962) பஹ்ரைன், ஓமான், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (1971) மொரிடானியா (1973) சோமாலியா (1974) பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO 1976) ஜிபூட்டி (1977) மற்றும் கொமோரோஸ் (1993) அங்கத்துவ நாடுகளாக இணைந்து கொண்டன.



**லீக்கின் குறிக்கோள்கள்**

உறுப்பினர்களின் அரசியல், கலாசார, பொருளாதார மற்றும் சமூகநலத் திட்டங்களை வலுப்படுத்தி ஒருங்கிணைப்பது, மற்றும் அங்கத்தவ நாடுகளிடையே ஏற்படும் மோதல்களை மத்தியஸ்தம் செய்வது இதன் நோக்கமாகும். இவற்றை விட

i. 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி கூட்டு பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் இந்நாடுகள் கையெழுத்திட்டன.

ii. ஆரம்ப காலங்களில் அரபு லீக் முக்கியமாகப் பொருளாதார, கலாசார மற்றும் சமூக நலத் திட்டங்களில் கவனம் செலுத்தியது,

iii. 1959 ஆம் ஆண்டு முவலாவது அரபு பெட்ரோலிய மாநாட்டை நடத்தியது

iv. 1964 ஆம் ஆண்டு அரபு லீக் கல்வி, கலாச்சார மற்றும் அறிவியல் அமைப்பை (ALECSO) நிறுவியது.

## 4. கரீபியன் சமூகம் (Caribbean Community -CARICOM):-

கரீபியன் சமூகம் (CARICOM) என்பது கரீபியன் கடல் பிராந்தியத்திலுள்ள இருபது நாடுகளின் கூட்டமைப்பாகும். இதில் பதினைந்து நாடுகள் அங்கத்துவ நாடுகளாகவும், ஐந்து நாடுகள் இணை அங்கத்துவ நாடுகளாகவும் உள்ளன. இப்பிராந்தியத்தில் ஏறக்குறைய பதினாறு மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் 60மூ மானவர்கள் 30 வயதிற்குட்பட்டவர்களாகும். மேலும், பழங்குடி மக்கள், ஆபிரிக்கர்கள், இந்தியர்கள், ஐரோப்பியர்கள், சீனர்கள், போர்த்துக்கேயர்கள், ஜாவாவிலுள்ள முக்கிய இனக்குழுக்கள் வாழ்கிறார்கள்.




பல மொழி பேசும் மக்கள் இங்கு வாழ்கிறார்கள். பிரெஞ்சு, டொச்சு இதனைவிட ஆபிரிக்க மொழிகள், ஆசிய மொழிகள் பேசுகின்ற மக்கள் வாழ்கிறார்கள். இதனால் எல்லோரையும் இணைக்கும் மொழியாக ஆங்கிலம் உள்ளது.

மேற்கிந்திய தீவுகள் கூட்டமைப்பு (1958) கரீபியன் சுதந்திர வர்த்தக சங்கம் (CARIFTA) (1965) என்பன கட்டமைக்கப்பட்ட ஆரம்பகால அமைப்புக்களாகச் செயற்பட்டன. இதன்தொடர்ச்சியாக பிராந்திய நாடுகளை ஒருங்கிணைப்பதற்கான அமைப்பாக கரீபியன் சமூகம் (1973) உருவாக்கப்பட்டது.

CARICOM அமைப்பு 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 திகதி பார்படாஸ் (Barbados) கயானா, (Guyana) ஜமைக்கா (Jamaica), டிரினிடாட் (Trinidad), டொபாகோ (Tobago) நாடுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் உருவாக்கப்பட்டது.

CARICOM நான்கு முக்கிய தூண்களில் நிறுத்தப்பட்டுள்ளது. அவைகளாவனசூ பொருளாதார ஒருங்கிணைப்பு, வெளியுறவுக் கொள்கை ஒருங்கிணைப்பு, மனித மற்றும் சமூக வளர்ச்சி, பாதுகாப்பு என்பனவாகும். இந்த தூண்கள் கரீபியன் சமூகத்தின் குறிக்கோள்களை கோடிட்டுக் காட்டுகின்றன

**5. ஐரோப்பிய கவுன்சில் (Council of Europe - CoE):-**

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்து சிறிது காலத்தின் பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் ஐக்கியத்தை உருவாக்கும் நோக்கில் பல இயக்கங்கள் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கின. இதன்விளைவாக, ஐரோப்பிய கவுன்சில் 1949 ஆம் ஆண்டு சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் அரசியல் நிறுவனமாக நிறுவப்பட்டது. ஐரோப்பிய கவுன்சிலின் நோக்கங்கள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.




- அங்கத்துவ நாடுகளின் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டவாட்சியைப் பாதுகாத்தல்,

- விழிப்புணர்வு, ஐரோப்பிய கலாசாரம், அடையாளம் மற்றும் பன்முகத்தன்மையை ஊக்குவித்தல்,
- ஐரோப்பிய சமூகம் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடுதல்,
- ஐரோப்பாவில் ஜனநாயக ஸ்திரத்தன்மையை ஒருங்கிணைத்தல்,
- சமூக ஒற்றுமை மற்றும் சமூக உரிமைகளை ஊக்குவித்தல்,
- கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு ஐரோப்பிய கலாசார அடையாளத்தை ஊக்குவித்து வளர்த்தல்,
- மனித உரிமைகள், சுகாதாரம், கல்வி, கலாசாரம், இளைஞர்கள், விளையாட்டு, சுற்றுச்சூழல், உள்ளூர் ஜனநாயகம், பாரம்பரியம், சட்ட ஒத்துழைப்பு, உயிரியல் நீதி, விலங்குநலன் மற்றும் பிராந்திய திட்டமிடல் தொடர்பாக உண்மையுடன் உழைத்தல்

இன்று, ஐரோப்பிய கவுன்சிலில் 47 நாடுகள் அங்கத்தவர்களாக உள்ளனர். இதில் சுமார் 800 மில்லியன் மக்கள் உள்ளனர். ஐரோப்பிய கவுன்சில் ஐரோப்பிய யூனியனில் இருந்து வேறுபட்டதாகும். இது 1957 ஆம் ஆண்டின் பின்னரே ஆரம்பமாகிறதுடன், ஐரோப்பிய பொருளாதார சமூகமாக இது ஒழுங்கமைக்கப்பட்டது. ஐரோப்பிய கவுன்சிலின் புவியியல் எல்லைகள் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் உறுப்பினர்களை விட பெரியதாகும்.

## 6. ஐரோப்பிய ஒன்றியம் (European Union -EU):-

ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள 28 நாடுகளால் உருவாக்கப்பட்டதொரு அமைப்பு ஐரோப்பிய ஒன்றியமாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சர்வதேச நாடுகள் துரித பொருளாதார அபிவிருத்தி நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. ஆனால் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையில் தொடர்ந்து சச்சரவுகளும், போர்களும் நடைபெற்று வந்தன. இது இந்நாடுகளை பெரிதும் பாதித்தன. இந்நிலையில் தமக்கிடையில் நிலையான சமாதானத்தை உருவாக்குவற்காக பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, லக்சம்பேர்க் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து 1951 ஆண்டு ஐரோப்பிய **நிலக்கரி மற்றும் உருக்கு சமூகம்** என்றதொரு அமைப்பை உருவாக்கின. இதுவே ஐரோப்பிய நாடுகளின் முதல் கூட்டுறவாகும்.

1957 ஆம் ஆண்டு இவ்ஆறு நாடுகளும் இணைந்து உரோம ஒப்பந்தம் என்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இதன்மூலமாக ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமூகத்துடன் இணைந்து ஐரோப்பிய **பொருளாதார சமூகம்** என்னும் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. அதேயாண்டு ஐரோப்பிய **அணுசக்தி சமூகம்** என்றதொரு அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்விரு அமைப்புக்களும் முறையே பொதுவான சுங்க ஒன்றியத்தை நிறுவுதல், அணுசக்தியை விருத்தி செய்வதில் கூட்டுறவுடன் செயற்படுதல் போன்ற நோக்கங்களைக் கொண்டிருந்தன.

ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமூகம், ஐரோப்பிய பொருளாதார சமூகம், ஐரோப்பிய அணுசக்தி சமூகம் என்பன தனித்தனியாக உருவாக்கப்பட்டாலும் இவை தமக்கிடையில் பொதுவான நீதிமன்றம் மற்றும் பொதுவான அசெம்பிளி என்பவற்றை உருவாக்கிக் கொண்டன.




1967 ஆம் ஆண்டு இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் மூலம் இவ் மூன்று அமைப்புக்களுக்குமானதொரு பொதுவான அமைப்பு உருவாக்கப்பட்டது. இது ஐரோப்பிய சமூகம் என அழைக்கப்பட்டது. பனிப்போர் மறைந்த பின்னர், 1993 ஆம் ஆண்டு **ஐரோப்பிய ஒன்றியம்** என்ற பெயரில் புதியதொரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தில் ஏழு அடிப்படை அமைப்புக்கள் உள்ளன. அவைகளாவனசூ

- ஐரோப்பிய பாராளுமன்றம்
- ஐரோப்பிய ஒன்றிய குழு
- ஐரோப்பிய சபை
- ஐரோப்பிய ஆணைக்குழு
- ஐரோப்பிய மத்திய வங்கி
- ஐரோப்பிய ஒன்றிய நீதித்துறை
- ஐரோப்பிய தனிக்கையாளர் சபை என்பனவாகும்

## 7. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (South Asian Association for Regional Cooperation (SAARC):-

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் ஸ்ரீர்க்பூ என்பது தெற்காசியாவிலுள்ள எட்டு நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் கூட்டாகும். இது 1985 ஆம் ஆண்டு வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய அரச தலைவர்கள் இதற்கான சாசனத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் நிறுவப்பட்டது. ஆப்கானிஸ்தான் 2007 ஆம் ஆண்டு சார்க் அமைப்பின் 8 வது உறுப்பு நாடாக இணைந்து கொண்டது. எட்டு உறுப்பு நாடுகளைத் தவிர சீனா, அமெரிக்கா, மியான்மர், ஈரான், ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா, மொரிஷியஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய ஒன்பது நாடுகள் சார்க் உச்சிமாநாடுகளில் பார்வையாளர்களாக கலந்துகொள்கின்றன.




**அமைப்பு மற்றும் செயல்முறை**

- இறையாண்மை சமத்துவம்,
- பிராந்திய ஒருமைப்பாடு,
- அரசியல் சுதந்திரம்,
- உறுப்பு நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யாமை மற்றும்
- பரஸ்பர நன்மை ஆகிய ஐந்து கோட்பாடுகளுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்டது.

சார்க் உறுப்பு நாடுகளிற்கிடையில் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளுக்குப் பிராந்திய அளவில் ஒத்துழைப்பு வழங்கும் அமைப்பாகச் செயற்படுகிறது. விவாதத்தின் போது இருதரப்பு மற்றும் சர்ச்சைக்குரிய விடயங்கள் விவாதிக்கப்படுவதிலிருந்து விலக்கப்படும். கருத்தொருமித்து முடிவுகள் எடுக்கப்படும்

## 8. பிரிக்ஸ் (BRICS)

பிரிக்ஸ் என்பது உலகில் வளர்ந்து வரும் முன்னணி சந்தைப் பொருளாதார நாடுகளாகிய பிரேசில், ரக்ஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் சக்திவாய்ந்த அமைப்பின் சுருக்கமாகும். பிரிக்ஸ் பொறிமுறையானது அமைதி, பாதுகாப்பு, அபிவிருத்தி, ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மனிதகுலத்தின் அபிவிருத்திக்குக் கணிசமானளவு பங்களிப்பு வழங்குவதையும், சமத்துவமான மற்றும் நீதியான உலகத்தை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



முதல் உச்சி மகாநாடு ரக்ஷ்யாவின் யெகாடெரின்பர்க்கில் (Yekaterinburg) நடந்தது. அங்கு நான்கு நாடுகளின் தலைவர்கள் BRIC பொருளாதாரக் குழுவின் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தென்னாப்பிரிக்கா இக் கூட்டமைப்பில் அங்கத்தவராக்கபட்டது. இதன் விளைவாக இதன் பெயர் BRICS என மாற்றப்பட்டது. BRICS ஆரம்பத்திலிருந்து சர்வதேச முறைமையில் பயனுள்ள பல செயல்களைச் செய்து வந்தது. பிரிக்ஸ் நாடுகள் புதிய பொருளாதார தரவரிசைகளைக் கொண்ட தனியான நாடுகளாக வளர்ச்சியடைந்தன.

2010 ஆம் ஆண்டு சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடாக மாறியது. இந்தியா தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பத்தாவது வது இடத்தில் உள்ளது. மற்றும் கொள்முதல் சக்தி சமநிலையில் (PPP) ஜிடிபியின் அடிப்படையில் நான்காவது இடத்தில் உள்ளது. 2011 ஆம் ஆண்டு பிரேசில் உலகின் பொருளாதார வளர்ச்சியில் ஆறாவது இடத்திலுள்ளது. ரக்ஷ்யா பொருளாதார வளர்ச்சியில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது மற்றும் தென்னாப்பிரிக்கா 26 வது இடத்தில் உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவ நாடுகள் ஒன்றிணைவது போன்று பிரிக்ஸ் நாடுகள் சர்வதேச முறைமைகளில் தங்கள் நிலைகளையும் செயல்களையும் ஒருங்கிணைக்கின்றன. தற்போதைய உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், உலகப் பொருளாதார ஒத்துழைப்புக்கான புதிய உத்வேகத்தை வழங்குவதன் மூலம் உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு புதிய வலுவினை வழங்கும் என உலகின் பல நாடுகள் பிறிக்ஸ் நாடுகளை எதிர்பார்க்கின்றன.

## 9. ஆசிய –பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு

ஆசிய–பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (Asia-Pacific Economic Cooperation-APEC) என்பது ஆசிய–பசிபிக் சமுத்திரத்தில் ஒன்றில் ஒன்று சார்ந்து வளர்ந்து வரும் பிராந்திய பொருளாதார அமைப்பாகும். இது 1989 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.




APEC இல் 21 அங்கத்துவ நாடுகள் உள்ளன. சமநிலையானதும், நிலையானதும், புதுமையானதுமான அதிக வளர்ச்சியை இப்பிராந்திய மக்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதன் மூலம் பிராந்தியப் பொருளாதார ஒருங்கிணைப்பைத் துரிதப்படுத்துவது இவ் அமைப்பின் நோக்கமாகும்.

### 10. குவாட் (QUAD)

’குவாட்ரிலேட்டரல் பாதுகாப்பு கலந்துரையாடல் (Quadrilateral Security Dialogue-QSD) என அழைக்கப்படும், குவாட் என்னும் அமைப்பு நான்கு நாடுகளை உள்ளடக்கிய கூட்டமைப்பாகும். 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரலையின் பின்னர் இந்தியா தனக்கும் தனது அயல் நாடுகளுக்கும் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இணைந்து பணியாற்றியது. இதன் தொடர்ச்சியாக, இந்த நாடுகள் 2007 ஆம் ஆண்டு முதற்தடவையாக தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) மகாநாட்டில் சந்தித்துக் கொண்டன. இதன்போது ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே குவாட் உருவாவதற்கான யோசனையை முன்வைத்தார். இவ் யோனனையினை ஏற்றுக் கொண்ட அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நான்கு நாடுகள் குவாட் அமைப்பினை நிறுவிக் கொண்டனர். வடஅத்திலாத்திக் மற்றும் இந்தோ–பசுபிக் சமுத்திரப் பிராந்திய ஜனநாயக நாடுகளின் கூட்டணியாக அழைக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு குவாட் உருவாக்கபட்டதிலிருந்த நான்கு நாடுகளின் பிரதிநிதிகள் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். குவாட் அமைப்பின் பிரதான நோக்கம் இந்தோ–பசிபிக் பிராந்தியத்தின் சுதந்திரமான, திறந்த, வளமான, எதிர்காலத்திற்கு இணைந்து பணியாற்றுவதாகும்.




இருப்பினும், இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் அதிகரித்து வரும் மோதல் நிலையினால், சீன அரசாங்கம் ஆஸ்திரேலியா மீது இராஜதந்திர அரசியல் அழுத்தத்தினை பிரயோகித்தது. இதனால் இவ்வமைப்பிலிருந்து ஆஸ்திரேலியா விலகிக் கொண்டது.

2010 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையில் தடைப்பட்டிருந்த இராணுவ ஒத்துழைப்பு மீண்டும் ஆரம்பமாகியது. இதன்பின்னர், மீண்டும் ஆஸ்திரேலியா குவாட் அமைப்பில் இணைந்து கொண்டது. 2012 ஆம் ஆண்டு இவ்வமைப்பு தொடர்பாக கூறும் போது ஜப்பானிய பிரதமர் கூறும் போது அமெரிக்கா, ஜப்பான், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ‘ஆசியாவின் ஜனநாயக பாதுகாப்பு வைரம்’ எனக் கூறியிருந்தார். 2017 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் குவாட் அமைப்பின் அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தை நடைபெற்றது.

**குவாட் கொள்கைகள்**

i. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் உள்ள தந்திரோபாய கடல் வழிமார்க்கத்தை எந்வித அல்லது யாருடையதும் இராணுவ அல்லது அரசியல் செல்வாக்கும் இல்லாமல் பாதுகாப்பது,
ii. குவாட்டின் பிரதான நோக்கம், விதிகளை அடிப்படையாகக் கொண்ட பூகோள ஒழுங்கு ( rules-based global order) இடத்தைத் துல்லியமாக அறிந்து அவ்விடத்தையடையும் சரியான வழியை தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் (Freedom of navigation) மற்றும் தாராள வர்த்தக முறைமையை போன்றவற்றைப் பாதுகாத்தல்,
iii. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் உள்ள இக் கூட்டணி நாடுகளுக்கு கடன் நிதியுதவியை வழங்குவது,
iv. நவீன மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், தொழிநுட்ப இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு, இணைய பாதுகாப்பு (Cyber security) கடல் பாதுகாப்பு, மனிதாபிமான உதவி, அனர்த்த நிவாரணம், காலநிலை மாற்றம், பெரும் தொற்றுநோய் மற்றும் கல்வி போன்ற சமகால சர்வதேசப் பிரச்சினைகள் தொடர்பாகவும் குவாட் அமைப்புத் தலைவர்கள் தமக்கிடையில் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி பைடன் Biden ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்து முதல் தடவையாக குவாட் தலைவர்களின் உச்சிமாநாட்டினை நடாத்தினார். இம்மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

- **கோவிட் மற்றும் பூகோள சுகாதாரம்**

நான்கு அங்கத்துவ நாடுகள் உட்பட பூகோளளவில் உயிர் அச்சுறுத்தலுக்கு கோவிட் –19 தொற்றுநோய் உள்ளது என்பதை குவாட் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர். இதனால் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் குவாட் அமைப்புத் தலைவர்கள் குவாட் தடுப்பூசி நட்புறவினை ஆரம்பித்தனர். இந்தோ–பசிபிக் மற்றும் பூகோளப் பாதுகாப்பிற்கான பயனுள்ள தடுப்பூசிகளை சமமானளவில் விநியோகம் செய்ய உதவுதல் என்ற தீர்மானத்தை எடுத்தனர்.

- **உள்கட்டமைப்பு**

குறூப் 7 (G-7) இன் கொள்கையினை பின்பற்றி டிஜிட்டல் இணைப்பு, காலநிலை, சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் பாலின சமத்துவ உள்கட்டமைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் உள்கட்டமைப்பு நட்புறவினை வளர்த்தல். குவாட் அமைப்பு நாடுகள் அமைந்துள்ள பிராந்தியத்தில் நடைபெறும் உள்கட்டமைப்பு முயற்சிகளை வலுப்படுத்த நிபுணத்துவம், திறன் மற்றும் செல்வாக்கை ஒன்றுதிரட்டி இப்பிராந்தியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் புதிய வாய்ப்புகளை அடையாளம் காணுதல்

**காலநிலை**

காலநிலை நெருக்கடியை அவசரமாக எதிர்கொள்ள குவாட் நாடுகள் காலநிலை தொடர்பான தூர நோக்கின் அடிப்படையில் செயலாற்றும்.

**சைபர் பாதுகாப்பு**

சைபர் பாதுகாப்பு தொடர்பில் நான்கு நாடுகளுக்கும் இடையில் நீண்டகால ஒத்துழைப்பை உருவாக்குதல், உள்நாட்டு மற்றும் சர்வதேசளவில் காணப்படும் சிறந்த நடைமுறைகளை செயற்படுத்த குவாட் நாடுகளின் நிபுணத்துவத்தை ஒன்றிணைப்பதன் மூலம் சைபர் அச்சுறுத்தல்களுக்கு எதிரான உள்கட்டமைப்பினை உருவாக்குதல்.

**விண்வெளி**

விண்வெளி உட்பட உலகின் அறிவியல் துறைகளில் குவாட் அமைப்பு நாடுகளின் அறிவியலாளர்கள் பங்களிப்பு செய்து வருகின்றனர். இதனையடிப்படையாகக் கொண்டு குவாட் அமைப்பின புதிய நட்புறவுடன் செயற்கைக்கோள் தரவைப் பரிமாறிக்கொள்ளும், காலநிலை மாற்றம், இடர்காலத் தயார்நிலை, மற்றும் இதனுடன் தொடர்புடைய ஏனைய சவால்களுக்கு பதிலளித்தல் என்பவற்றில் கவனம் செலுத்தும்.